**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109722

1. District மாவட்டம் : அரியலூர் PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு பிரிவு அரியலூர் Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 1/2022 Date: நாள் 12.8.

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Act 1988 (as amended 2018) Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 10.8.2022 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு 12.30 Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.8.2022 Time : நேரம் 08.00
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் FIR வந்தது Time : நேரம் 09.00

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 35 கி.மீ, தென் கிழக்கு, ஏலாக்குறிச்சி
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வருவாய் ஆய்வாளர் அலுவலகம், அரியலூர் தாலுகா, அரியலூர் மாவட்டம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ரெ. சக்திநாதன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் செல்வமணம்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 37/2022 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி பிள்ளையார் கோவில் தெரு, செங்கராயன்கட்டளை ஏலாக்குறிச்சி அஞ்சல், அரியலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. செந்தில்குமார், வருவாய் ஆய்வாளர், ஏலாக்குறிச்சி பிர்கா
2. திரு. கோவிந்தராஜ், கிராம நிர்வாக அலுவலர், ஏலாக்குறிச்சி. அரியலூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

12.08.2022 காலை 09.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் இருந்தபோது அரியலூர் மாவட்டம், ஏலாக்குறிச்சி அஞ்சல், செங்கராயன்கட்டளை பிள்ளையார் கோவில் தெருவில் வசிக்கும் செங்கமலம் மகன் சச்சிதானந்தம் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புனர் செ.சச்சிதானந்தம், த/பெ. செங்கமலம், பிள்ளையார் கோர்வில் தெரு, செங்கராயன்கட்டளை, ஏலாக்குறிச்சி அஞ்சல், அரியலூர் வட்டம்(ம)மாவட்டம் பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அரியலூர் மாவட்டம். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் 10-ம் வகுப்பு வரை படித்துவிட்டு விவசாயம் செய்து வருகிறேன். எனது தந்தை செங்கமலம் என்பவருக்கு 82 வயதாகிறது. தற்போது உடல் நலம் சரியில்லாமல் இருந்து வருகிறார். எனக்கு சத்தியா என்ற தங்கை உள்ளார். எனது தந்தை என்னுடன் வசித்து வருகிறார். ஏலாக்குறிச்சி கிராமத்தில் உள்ள புஞ்சை சர்வே எண்.27/3-ல், விஸ்திரணம் 0.47.0 ஏர்ஸ் உள்ள நிலத்தினை D நமுனா NP/R.Dis/DK35/2004, நாள்:02.09.2004-ன்படி உடையார்பாளையம் வட்டாட்சியர் அவர்களால் எனது தந்தை செங்கமலம் பெயருக்கு வழங்கப்பட்டு, அதுநாள் முதல் எங்களது அனுபவத்தில் உள்ள மேற்படி நிலமானது தற்போது UDR-ல் புஞ்சை தரிசு நிலமென பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தினை வருவாய் ஆவணங்களில் எனது தந்தை பெயரில்,

[Separate Sheet Enclosed]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு [signature]

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
V.[signature] 12.8.2022

15. Date & Time of despatch to the court: 12.8.2022
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 09.45 Hrs.

Name: பெயர் V.V.ANANTH
Rank: நிலை Inspector of Police. No. எண்
VAC, Ariyalur.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

கம்பியூட்டர் சிட்டாவில் பதிவேற்றம் செய்ய ஆவணம் செய்யுமாறு கடந்த 18.07.2022 ஆம் தேதி அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் எனது தந்தையின் பெயரில் நான் மனு கொடுத்திருந்தேன். நான் கொடுத்த மனு தொடர்பாக ஏலாக்குறிச்சி கிராம நிர்வாக அலுவலர் திரு.கோவிந்தராஜ் என்பவர் 23.07.2022 ஆம் தேதி என்னை செல்போனில் தொடர்பு கொண்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்திருந்தீர்களா என்று கேட்டார். அதற்கு நான் ஆமாம் என்று சொன்னேன். அவர் எனது தந்தையின் பெயரில் நான் செய்திருந்த மனு சம்மந்தமாக விசாரணை செய்ய வேண்டும் அதனால் நீங்கள் கொடுத்த மனு மற்றும் இதர ஆவணங்களையும் எடுத்து வரும்படி கூறினார். நான் அவர் சொன்னது போல் ஆவணங்களை எடுத்து கொண்டு அன்று 23.07.2022 ஆம் தேதி மதியம் சுமார் 02.00 மணியளவில் ஏலாக்குறிச்சியில் உள்ள கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று கிராம நிர்வாக அலுவலரை சந்தித்தேன். அப்போது அவர் வருவாய் ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அவர்களை போய் பார்க்குமாறு சொன்னார். நான் வருவாய் ஆய்வாளரை அவரது அலுவலகத்தில் சென்று பார்த்தபோது, வருவாய் ஆய்வாளர் திரு.செந்தில்குமார் என்பவர் அலுவலகத்தில் இருந்தார். சற்று நேரத்தில் கிராம நிர்வாக அலுவலர் திரு.கோவிந்தராஜ் அவர்களும் அங்கு வந்தார். அவர்கள் இருவரும் என்னிடமிருந்து ஆவணங்களை வாங்கி சரிபார்த்துவிட்டு சரியாக இருப்பதாக கூறினார்கள். அப்போது, வருவாய் ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அவர்கள் அந்த நிலத்தினை உங்கள் தந்தை பெயருக்கு கணினி சிட்டாவில் பதிவேற்றம் செய்ய பரிந்துரை செய்து அனுப்ப வேண்டுமென்றால் எங்கள் இருவருக்கும் தனியாக ரூ.50,000/- கொடுக்க வேண்டும் என்று சொன்னார். எதுக்கு சார் அவ்வளவு பணம் கேக்குறீங்க என்று நான் கேட்டேன். அதற்கு வருவாய் ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அவர்கள் அந்த இடம் தரிசு நிலம் என்று உள்ளது. அதனை உங்கள் அப்பா பெயருக்கு மாற்ற வேண்டுமென்றால் அதில் நிறைய வேலைகள் உள்ளது. அதனால் நீ ரூ.50,000/- ரெடிபண்ணி கொடுத்தா நாங்க இருவரும் ஆளுக்கு பாதியா எடுத்துக்கிட்டு உங்க வேலைய உடனே முடிச்சி குடுத்துடுவோம். இல்லை என்றால் உங்களது மனுவினை பெண்டிங்கில் போட்டு விடுவோம் என்று கூறினார். மேலும், அன்றைய தினமே மேற்படி சர்வே எண்ணில் உள்ள இடத்திற்கு இருவரும் வந்து இடத்தை பார்த்தார்கள். அப்போது, அவர்கள் இருவரும் நிலம் தற்போது உங்கள் அனுபோகத்தில்தான் உள்ளது என்று எழுதி அனுப்பிவிடுகிறோம், நாங்கள் கேட்ட தொகையில் பாதியாவது உடனே தரவேண்டுமென்று கட்டாயப்படுத்தினார்கள். நான் வேறுவழியின்றி எனது குழந்தைகளின் படிப்பு செலவிற்காக வைத்திருந்த பணம் ரூ.10,000/-யை எடுத்து வருவாய் ஆய்வாளர் திரு.செந்தில்குமரிடம் கொடுத்தேன். அதனை பெற்றுக் கொண்ட அவர் அந்த இடத்திலேயே ஏலாக்குறிச்சி கிராம நிர்வாக அலுவலர் திரு.கோவிந்தராஜ்க்கு ரூ.5,000/-யை கொடுத்துவிட்டு மீதி தொகையை அவர் வைத்துக் கொண்டார். பின்னர் என்னை ஒரு வாரம் கழித்து மீதிப்பணம் ரூ.40,000/-த்துடன் வந்து அலுவலத்தில் பார்த்தால் உங்கள் மனு சம்பந்தமாக ஊரில் உள்ள இரண்டு சாட்சிகளை விசாரித்து, சிபாரிசு செய்து அனுப்புவதாக கூறிச்சென்றார்கள். பின்னர் 10 நாட்கள் கழித்து நான் கிராம நிர்வாக அலுவலர் திரு.கோவிந்தராஜ் என்பவரை அவரது அலுவலகத்தில் சென்று சந்தித்து எனது மனு சம்மந்தமாக கேட்ட போது, பணம் ரெடி பண்ணிக்கிட்டு வந்துட்டிங்களா என்று கேட்டார். நான் இன்னும் ரெடியாகல சார், ஏதும் பணம் இல்லாம செய்ய முடியாதா என்று கேட்டேன். பணம் கொடுத்தாதான் வேலை ஆகும், நீங்க சீக்கிரம் ரெடி பண்ணிட்டு செல்லுங்க, நான் விரைவில் டிரான்பரில் சென்றாலும் சென்றுவிடுவேன், நீங்க ஏற்கனவே கொடுத்த ரூ.10,000/-ல் எனக்கு ரூ.5,000/- கொடுத்தார், நான் வாங்கிக்கொண்டேன், அதனால் நீங்கள் வருவாய் ஆய்வாளரை போய் பாருங்கள் அவர் விபரம் சொல்வார், நீங்கள் அவரிடமே பணத்த கொடுங்க, நான் வாங்கிக்கிறேன் என்று சொன்னார். அதன்படி 10.08.2022 ஆம் தேதி மதியம் சுமார் 12.30

மணியளவில் வருவாய் ஆய்வாளர் திரு.செந்தில்குமார் என்பவரை அவரது அலுவலகத்திற்கு சென்று சந்தித்து மனு சம்மந்தமாக கேட்டேன். அப்போது, VAO-வை பார்த்தேன் சார், அவர் உங்களை பாருங்கள் விபரம் சொல்வார் என்று சொன்னார், அதனால்தான் சார் வந்தேன் என்று அவரிடம் சொன்னேன். அதற்கு வருவாய் ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அவர்கள் என்னிடம், நான் ஏற்கனவே சொன்னமாதிரி மீதித் தொகை ரு.40,000/- ரெடிப்பண்ணிட்டு வந்தீங்கன்னா நாங்கள் உடனே உங்க வேலையை முடிச்சு அனுப்பிடுவோம். அதுக்கு அப்புறம் தாசில்தார் ஆபிசுக்கு உங்க மனு போனபிறகு அங்க ரு.50,000/- தனியா கொடுக்குற மாதிரி இருக்கும் என்று சொன்னார். அதற்கு நான், சார் நீங்களே இவ்வளவு கேக்குறீங்க, தாசில்தாருக்கும் தனியா கொடுக்கனுமா சார் என்று கேட்டேன். அதற்கு அவர் ஆமாம், கொடுத்தாதான் வேலை ஆகும் என்று சொன்னார். எதுக்குசார் ரு.50,000/- கேக்குறீங்க என்று கேட்டேன். அது இல்லாம ஒன்னும் பன்னமுடியாது, நீங்க முதல்ல பணத்த ரெடி பண்ணிக்கிட்டு வாங்க, இந்த VAO இருக்கும்போதே உங்க மனுவை சிபாரிசு செய்து அனுப்பிடனும் ஏன்னா அவர் டிரான்ஸ்பர்ல போனாலும் போயிடுவாரு, நீங்க லேட்பண்ணாதீங்க, சீக்கிரமா பணத்தை ரெடிப்பண்ணி கொடுத்தீங்கன்னா அதுல நான் எனக்கு தனியா ரு.20,000/- எடுத்துக்குவேன், VAO திரு.கோவிந்தராஜ்க்கு ரு.10,000 தான் கொடுப்பேன். மீதி ரு.10,000/- நான் கையில வச்சுக்குவேன். ஏன்னா அவர் டிரான்ஸ்பர்ல போயிட்டார்ன்னா பிறகு வர்ற VAO தான் ஆர்டர் வந்த பிறகு சிட்டாவுல அடிச்சி போடனும், அவரு செய்யமாட்டேன்னுட்டாருன்னா அப்புறம் நீங்க என்ன வந்து கேட்பீங்க, அதுக்கு நான் பொறுப்பாகனும். அதனால் நான் கையில் வச்சிக்குவேன். அடுத்து வர்ற VAO க்கு அந்த ரு.10,000/-ஐ கொடுத்து சிட்டாவுல அடிச்சு போட சொல்லிருவேன், அது என்னோட பொறுப்பு என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லைன்னாலும் அப்போதைக்கு சரி என்று சொன்னேன். அவரிடம், சார் இப்போதைக்கு என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றேன். அதற்கு அவர் வர்ர வெள்ளிக்கிழமைக்குள்ள எனக்குள்ள பணம் ரு.20,000/-த்தை ரெடிப்பன்னிக்கிட்டு நேரா என்ன வந்து பாரு, நான் பார்த்து சரிபண்ணிக்குறேன் என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை என்றாலும், அப்போதைக்கு சரி சார் ரெடிப்பண்ணிட்டு வர்றேன் என்று சொல்லிவிட்டு நான் வந்துவிட்டேன். பின்னர், வருவாய் ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரு.20,000/-த்தை ரெடிபண்ணிக்கொண்டு, லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்கலாம் என்று முடிவு பண்ணி என்னிடம் லஞ்சம் கேட்ட கிராம நிர்வாக அலுவலர் திரு.கோவிந்தராஜ் மற்றும் வருவாய் ஆய்வாளர் திரு.செந்தில்குமார் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி இன்று 12.08.2022 ஆம் தேதி புகார் மனுவுடன், பணம் ரு.20,000/-த்தை கொண்டு வந்துள்ளேன். அவர்கள் இருவர் மீதும் தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு, (sd.) (தமிழில் ஒப்பம் தேதி 12.08.2022). **SUBMITTED** Sir, Received this computer typed written complaint from the complainant on 12.08.2022 at 08.00 hrs, verified and ascertained its genuineness through sources, and registered a case on the complaint on 12.08.2022 at 09.00 hrs in Ariyalur Vigilance and Anti-Corruption Detachment Crime No.01/2022, U/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018). (sd) V.Vanathi, Inspector of Police, V&AC, Ariyalur. I am submitting the Original F.I.R. along with the complaint to the Hon'ble Court of the Chief Judicial Magistrate, Ariyalur and the copies of the F.I.R to all other concerned Officials.

V. V 12/8/2022
V&AC, Ariyalur.